# கலாதீபம்

කලාදීපම් KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.03.2024 தீபம் 21


# கலாசாலையில் பிரபல செயலூக்கப் பேச்சாளர் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் கற்கக் கசடற என்ற பொருளில் சிறப்புரை

**மாணவர்களின் உள்ளம் எனும் கல்வெட்டில் தம்மை நிரந்தரமாக பதிக்ககூடியவரே நல்லாசிரியர் – தமிழகத்தின் பிரபல செயலூக்க உரையாளர் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் எடுத்துரைப்பு.**

மாணவர்களின் உள்ளம் எனும் கல்வெட்டில் ஆசிரியர்கள் நிரந்தரமாக தமது பெயரை பொறிக்கவேண்டும். எது கசடு? எது கல்வி? என்று தெரிந்து கற்பிக்கும் ஆற்றலை ஆசிரியர் பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு குறிப்பிட்டடார் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணன்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அவரது செயலூக்க உரை கடந்த 26.02.2024 இடம்பெற்றபோது பேராசிரியர் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கலாசாலை அதிபரின் அழைப்பில் நிகழ்வில் கலந்து கொண்ட பேராசிரியர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு

அடுத்த தலைமுறைக்கு ஏற்றவாறு நல்ல சமூதாயத்தை தோற்றுவிப்பதற்கு ஆசிரியர்களே ஊற்றுக்கால் ஆனவர்கள்.

1964இல் இந்தியாவில் கல்விச் சீர்திருத்தத்தை ஏற்படுத்திய கோத்தாரி ஆணைக்குழு தனது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகிறது. A destiny of the country is decided in the classroom - நாட்டின் எதிர்காலம் வகுப்பறையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அந்த வகையில் ஆசிரியர்களின் பொறுப்பு மிகப்பெரியதாகும்.

ஆண்டவனையும் ஆசிரியரையும் அடைப்புக் குறிக்குள் அடைக்க முடியாது. இரண்டுபேருமே விஸ்வரூபம் எடுத்தவாறே பிறந்தவர்கள். துவண்டு நிற்கும் மாணவனின் முன்னால் ஆசிரியர் தன்னுடைய விஸ்வரூபத்தைக் காட்டவேண்டும். மாணவனை வழிப்படுத்தவேண்டும்.

பேட்றன் றசல் – நாட்டின் பாதுகாப்பு என்பது இராணுவத்திடம் மாத்திரம் தங்கியிருப்பதில்லை



ஆசிரியரிடம் வீரமும் இருக்கிறது ஈரமும் இருக்கிறது உமர் முக்தர் என்பவர் இரண்டாம் உலகப்போரில் பிரபலமானவர். அவர் குறித்து ஒரு திரைப்படமும் வெளிவந்துள்ளது. Umar Mukhtar—The Lion of the desert (பாலைவனத்தின் சிங்கம்) என்பதே இப்படத்தின் பெயராகும்

உமர் முக்தர் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி போர்த் தளபதியாக வாழ்க்கையை நிறைவுசெய்தவர். இரண்டாம் உலகப்போரின் போது முசோலினி லிபியாவின் சிறு பகுதியை கைப்பெற்ற முடியாமல் போகிறான். தன்னுடைய ஒற்றர்களை அழைத்து அதற்கான காரணத்தை வினவுகிறான் எதிரிப் படையிலே இருப்பவன் யார்? அவன் என்ன தொழில் செய்கிறான்? என்று கேட்கிறான். அதற்கு ஒற்றர்கள் சொல்கிறார்கள் 'எதிரிப் படையின் தளபதியாக இருப்பவர் உமர் முக்தர். அவர் ஒரு ஆசிரியர்' என்கிறார்கள். அப்போது முசோலினி சொல்கிறான் அப்படியானால் 'உமர் முக்தர்' ஒரு ஆபத்தான ஆள். ஆசிரியர் எதையும் சாதிக்க வல்லவராக இருக்க வேண்டும் மண்ணாக இருப்பவற்றைக் கூட சிற்பகமாக வனைந்து கொடுக்கக் கூடிய ஆற்றல் ஆசிரியருக்கு உண்டு.

எத்தனையோ சோகங்களுடனும் வருத்தங்களுடனும் வரும் குழந்தைகளை தெம்பூட்டி அவர்களை வளர்த்தெடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்குரியது என்றார்.

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323


# பணிநயந்து வாழ்த்துகிறோம்

## திருமதி M.H.A சஜீவனி
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 15.01.2013 தொடக்கம் சிங்களபாட இணைக் கப்பட்ட விரிவுரை யாளராகப் பணியாற்றி ஆரம்பக்கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி நெறியினருக்கு சிங்கள பாடத்துறை சார்பாகவும் ஆரம்பக் கல்வி நிகழ்வுகளின் செயற்பாடுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தினை 31.12.2023 பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

## திரு ந.அனந்தசயனன்
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 03.11.2014 தொடக்கம் கணிதபாட இணைக் கப்பட்ட விரிவுரை யாளராகப் பணி யாற்றி கணித பாடத்துறை மேம்பாட்டிற்றும் கணி தம்சார் நிகழ்வுகளின் செயற்பாடுகளுக்கும் பங் களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இட மாற்றத்தினை 31.12.2023 பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

# கலாதீபம்

Kaladeepam

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

இலங்கையின் கல்வித்துறையானது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேறி வருகின்றது கோவிட் தொற்றுநோய், பாரிய கடன் சுமை என்பன கல்வித்துறையின் மிகப்பெரிய சவால்கள் ஏற்பட காரணங்களாக அமைந்துள்ளன.

இதனனைவிட பெரிய சவால்கள் யாதெனில் மூளைசாலிகளின் வெளியேற்றம ஆகும். இது இலங்கையின் கல்வித்துறை எதிர்கொள்ளும் பிறிதொரு சவாலாகும். அறிவுசாலிகளின் புலம் நோக்கிய பெயர்வு பல வெற்றிடங்கள் ஏற்பட காரணமாக அமைந்துள்ளது.

இதனால் எதிர்கால கல்வி இலக்கினை அடைய முடியாது போய்விடுமோ என்ற ஐயப்பாடு எழுகிறது. **வளமான அபிவிருத்தி இலக்குகளை கொண்ட இலங்கை** 2048 எனும் தொனிப்பொருள் மிகவும் வினை த்திறனான செயற்பாடுகளை உள்ளடக்கி உள்ளது.

பெரும்பான்மையான மாணவர்கள் கல்வியில் இடைவிலகி பாரிய மனித வலு அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றனர். உரிய இலக்கினைக் கொண்டிராத ஏட்டுக்கல்வி பொருத்தமற்ற மனிதவலு தேக்கத்தினை உருவாக்குகின்றது. இதன் விளைவுவாக இளையோர் சமுதாயம் போதைக்கு அடிமையாகும்.

நாட்டின் கல்விக் கொள்கைகள் பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குமாயின் இளையோர் எதிர்காலம் சிறப்படையும்.

வறுமை, பொருளாதார சமமின்மை, என்பவற்றை நீக்கல். தொழிற்பயிற்சியை உள்ளடக்கிய கல்வி. சுயாதீன தொழில் முனைவோரை உருவாக்குதல். செல்நெறி கோட்பாடுடைய இளையோர் சமூகத்தினை உருவாக்குதல். என்பன அவற்றுள் சிலவாகும்.

இலங்கையில் கல்வி நெருக்கடி ஏற்படுவதற்கு பிறிதொரு காரணம் தொலைதூர சிந்தனையுள்ள தொழில்கல்வி வழங்கப்படாமையாகும். உயர்கல்வி கற்ற மாணவர்கள் தமது எதிர்காலத்தினை நோக்கி நகரமுடியாதிருப்பது மிகவும் துரதிஷ்ட வசமான தாகும். சர்வதேச தொழில் வளங்கு னர்களின் எதிர் பார்ப்புகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் எமது ஒட்டுமொத்த கல்வி அமைப்புக்களும் மாற்றி அமைக்கப்படவேண்டும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற கற்றல்துறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான புதிய விளைவுகள் கல்விப்புலத்தில் ஏற்படுமிடத்து புதிய கல்விக் கொள்கைகளினால் பயனுண்டு.

## கலாசாலையின் புதிய சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தராக திருமதி நிஷந்தி பிரதீபன் கடமையேற்றார்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புதிய சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தராக திருமதி நிஷந்தி பிரதீபன் (MSO class I) அவர்கள் தனது கடமைகளை 21.02.2024லிருந்து செயற்படும்படியாக பெறுப் பேற்றுக் கொண்டார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருடைய சேவை சிறப்புற அமைய கலாசாலை சமூகத்தினர் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## கலைமலர் நூற்றாண்டு மலரினை நூலக இணையத்தளத்தில் பார்வையிடலாம்

| கலைமலர்: கோப்பாய் ஆசிரிய கலாசாலை 2023 | |
|---|---|
|  | |
| நூலக எண் | 113843 |
| ஆசிரியர் | - |
| வகை | பாடசாலை மலர் |
| மொழி | தமிழ் |
| பதிப்பகம் | கோப்பாய் ஆசிரிய கலாசாலை |
| பதிப்பு | 2023 |
| பக்கங்கள் | 233 |

# News in Brief - Month of February

**04.02.2024**

**Srilanka National Day** was held at Kopay Teachers' College at 9 am under the leadership of Principal Mr S,Laleeson.

**07.02.2024**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr.S. Lalee son, Principal of KTC started at 8.30 am.
The event was conducted by First year Primary teacher trainees. The event was moderated by Mr.R.Rasanathan. Mrs R.Theva mani - first year teacher trainee delivered speech on the topic course of Cancer.
The Guest introductory speech was delivered by the lecturer Mr. V. Senthan
Guest Speaker Rev. Father Dr Vincent Patrict - The founder of Home for Hope was delivered a speech on drug free world.

**14.02.2024**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr. S.Laleeson Principal of KTC started at 8.30 am.
The event was conducted by Second year English course teacher trainees. The event was moderated by Mr. Farsath Mohamed.
The Guests introductory speech was delivered by the Principal.
Mr. E. Mayuranathan creator of Tamil Wikipedia (2003) and Mr Muthusamysarma Sivakosaran (Software Engineer) on behalf of Tamil Wikipedia as guest speakers.

**21.02.2024**

**Service Appreciation Ceremony**

The ceremony of Vathany Ketharanathan who Retired from her MSO — I service was held on 21.02.2024.
Mr&Mrs Vathani Ketharanathan were honored by garlanding flowers and wearing a bonnet by the Lecturers guild and gave a felicitation plaque by the college Principal Mr S.Laleeson.
Similarly non-academic staff, 1st and 2nd year teacher trainees were honored by the Vathany Ketharanathan. The event was mainly organized by the non-academic staff

**26.02.2024**

Thiruvalluvar Gurupooja Day was celebrated on Monday 26.02.2024 at Kopay Teachers' College at 8.15am
Principal S. Laleesan presided over the event and garlanded the Thiruvalluvar statue in front of the College.

**26.02.2024**

Professor Jayanthasri Balakrishnan of Tamil Nadu delivered a motivation talk at Kopay Teachers' College on 26.02.2024 at 3.30pm.
She addressed on the topic of **'Karka Kasadara'**

**28.02.2024**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr.S. Lalee son, Principal of KTC.
The event was conducted by First year Science teacher trainees. The event was moderated by Mr M.Kajanthan. Mr R.Senthur selvan - first year Science teacher trainee, delivered speech on the topic Thiruvallu var.
The Guest introductory speech was delivered by the lecturer Mr. V. Senthan
Mr.N.V.Kumariventhan (Mahenthirarajah), an independent Tamil activist and the founder of the Sri Lanka Kumari Tamil Forum, Participated as the guest speaker.

# முப்பத்தொரு ஆண்டுகளாக அரச சேவையாற்றி பணியிலிருந்து ஓய்வு பெற்றார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஸ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி வதனி கேதாரநாதன் (MSO — I)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி வதனி கேதாரநாதன் அவர்களின் மணிவிழா 21.02.2024 அன்று நடைபெற்றது.

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வானது கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேடபூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகியது.

மங்கல வாத்தியத்துடன் திரு,திருமதி வதனி கேதாரநாதன் தம்பதியர் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து தலைமையுரை மற்றும் வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

'வதனி அக்கா' இது கலாசாலை வளாகத்தில் அடிக்கடி செவிமடுக்கும் வார்த்தை கலாசாலையில் முதன்மை அச்சாணியாக சுழன்று கொண்டிருந்த திருமதி வதனி கேதாரநாதன் அவர்கள் வடமராட்சி மண்ணில் திரு.திருமதி அருணாசலம் சோதியம்மா தம்பதியரின் மகளாகப் பிறந்து வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை போன்ற புகழ்பெற்ற பாடசாலைகளில் கல்வி கற்றவர்

அவர் 16.2.1993 அன்று கொழும்பு பொலீஸ் திணைக்களத்தில் ஆங்கில தட்டெழுத்தாளராக தனது அரச பணியை ஆரம்பித்தார். பின்னர் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றிய அவர் 06.12.2014 அன்று கலாசாலையில் அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்த தரம் - *II* இல் இணைந்து கொண்டார். அன்று முதல் ஓய்வு பெறும் நாள் வரையில் கலாசாலை சமூகத்துடன் ஒன்றிய ஒருவராக பயணித்தார்.

நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் வல்லவர். திருவாளர் கேதாரநாதனுடன் இல்லறத்தில் இணைந்து தனது வாழ்க்கை பயணத்தை தொடர்ந்த அவர் 21.2.2024 ஆண்டு அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவரது மணிவிழாவினை கற்பித்தல் சாரா உத்தியோகத் தர்கள் முன்னின்று நடாத்தி வைத்தனர்.

அவரின் ஓய்வு காலம் சிறக்க வாழ்த்துக்கள்.











# புதன் 07.02.2024 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக கலாநிதி வின்சென்ட் பற்றிக், நம்பிக்கை இல்லப் பொறுப்பாளர் (Home For Hope) அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதி லக்சுமி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

முதலாம் வருட ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர்.

திரு.இ.இராசநாதன் நிகழ்வுகளை முன் னிலைப்படுத்தினார்

முதலாம் வருட ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி ர.தேவமணி புற்றுநோய் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார். அவர் தனது உரையில் நோயின் வகைகள் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கருத்துக்களை முன் வைத்தார்.

அதிதி பேச்சாளர் பற்றிய அறிமுக உரையினை விரிவுரையாளர் திரு வே.சேந்தன் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளர் வண அருட்தந்தை கலாநிதி வின்சென்ட் பற்றிக் - நம்பிக்கை இல்லல பொறுப்பாளர் ( Home for Hope) அவர்கள் போதையற்ற உலகு என்னும் தலைப்பில் உரை ஆற்றினார்.

அவர் தனது உரையினை நடைமுறைச் சாத்தியமான விடயங்களுடன் தொடர்பு படுத்தி கூறுயதுடன் இன்றைய பாடசாலை ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அதனை எவ்வாறு வெற்றிகரமாக கொண்டு செல்வது பற்றியும் விளக்கமளித்தார்

நிறைவாக அதிதி அவர்கள் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக அதிபர் அவர்களின் கருத்துரையுடன் நிறைவு பெற்றது.











# புதன் 14.02.2024 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளர்களாக திரு இ.மயூரநாதன்(கட்டடக் கலைஞர்) திரு மு.சிவகோசரன் (மென்பொறியியலாளர்) அவர்கள் கலந்து சிறப்பித்தனர்

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்சுமி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். திரு பர்சாத் முகமட் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார்

அதிதி பேச்சாளர் பற்றிய அறிமுக உரை யினை அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் ஆற்றினார்.

விரிவுரையாளர் உரையினை திரு வேல் நந்தகுமார் அவர்கள் தமிழ் இலக்கியங்கள் காட்டும் அகத்திணை மரபு எனும் தலைப் பில் ஆற்றினார்.

அதிதி பேச்சாளர்களாக தமிழ் விக்கி ப்பீடியா சார்பாக திரு இ.மயூரநாதன் (தமிழ் விக்கிப் பீடியாவை (2003) இல் உருவாக்கி யவர்) மற்றும் திரு முத்துச்சாமிசர்மா சிவகோசரன்(மென்பொறியாளர்) இருவரும் இணைந்து நிகழ்வினை கொண்டு சென்றனர்

திரு இ.மயூரநாதன் விக்கிபீடியாவின் ஆரம்பம், தமிழ் விக்கிபீடியாவின் தோற்றம், தமிழ் விக்கிபீடியாவின் பங்களிப்பு தொடர்பில் சிறப்பான உரையை வழங்கினார். அவரைத் தொடர்ந்து தமிழ் விக்கிபீடியாவில் இவ்வாறு கட்டுரைகளை மற்றும் ஆக்கங்களை தரவேற்றம் செய்தல்,எவ்வாறு ஆதாரங்களை இணை ப்பது பற்றியும் பிரயோக ரீதியான விளக்கத்தினை மென்பொறியியலாளர் திரு.மு.சிவகோசரன் அவர்கள் வழங்கினார் இந்நிகழ்வின் பயனாக கலாசாலை சமூகம் தமிழ் விக்கிபீடியா தொடர்பான சிறந்த விளக்கத்தினை பெற்றுக் கொண்டது நிறை வாக அதிதிகள் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.














# புதன் 28.02.2024 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திரு நா.வை.குமரியானந்தன் (தனித்தமிழ் ஆர்வலர், இலங்கை குமரித்தமிழ் மன்ற நிறுவுனர்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்

புதன் ஒன்றுகூடல் கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்சுமி மண்டபத்தில் ஆரம்பமாகியது.

முதலாம் வருட விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். நிகழ்வுகளை ஆசிரிய மாணவன் திரு. மு.கஜேந்திரன் முன்னிலைப்படுத்தினார்.

அதிதி பேச்சாளராக தனித் தமிழ் ஆர்வலரும் இலங்கை குமரித்தமிழ்ப்பணி மன்ற நிறுவுனரு மாகிய மின் பொறியியலாளர் நா.வை. குமரிவேந்தன் கலந்து கொண்டார்.

அதிதி பற்றிய அறிமுக உரையினை விரிவுரை யாளர் திரு வே.சேந்தன் ஆற்றினார்.

திரு இ. செந்தூர்ச்செல்வன் (விஞ்ஞானநெறி ஆசிரியமாணவன்) திருக்குறள் காட்டும் அறிவியல் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார்.

நிகழ்வில் திரு நா.வை குமரிவேந்தன் அவர்கள் கலாசாலையின் கிருஸ்ணை படிப்பகத்திற்கு மொழி, பண்பாடு வரலாறு. மீட்பு, காப்பு, வளர்ப்பு. மற்றும் இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம் பத்தாம் ஆண்டு நிறைவுமலர். ஆகிய இரண்டு நூல்களை நூலகத்திற்குப் பொறுப்பான திரு வே.சேந்தன் விரிவுரையாளரிடம் கையளித்தார்.

அதிதிப்பேச்சாளர் அவர்கள் கலாசாலை சமூகத்தி னரால் பொன்னாடை போர்த்தியும், மாலை அணி வித்தும் கௌரவிக்கப்பட்டார்.

தனித்தமிழ் இயக்க வரலாறு குறித்து எடுத்து கூறி நிறைவுரையினை கலாசாலை அதிபர் ஆற்றினார்.



















# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை சிறப்பாக இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினம் 26.02.2024 திங்கட்கிழமை அனுட்டிக்கப்பட்டது.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் முன்றிலில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் மலர் வழிபாடு மேற்கொண்டனர்.

திருவள்ளுவர் குறித்தும் திருக்குறள் குறித்தும் ஆசிரிய மாணவர்களின் சிற்றுரைகள் இடம்பெற்றன. உரைகளை ஆற்றிய ஆசிரிய மாணவர்களுக்கு புத்தக பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இப்பரிசில்களை கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் மு.ஜெயக்குமாரி வழங்கி னார்.

திருவள்ளுவர் குருபூசை மாசி மாத உத்திர நட்சத்திர நாளில் அனுஷ்டிக்கப்படுவது வழக்கமாகும். திருவள்ளுவர் வைகாசி மாத அனுஷ நட்சத்திரத்தில் பிறந்து மாசி மாத உத்தர நட்சத்திரத்தில் பூரணமடைந்தார் என்பது தமிழ் அறிஞர்களின் நம்பிக்கையாகும். திரு வி.க., தமிழ் தாத்தா உ.வே.சுவாமிநாதையர், போன்றோர் இக்கருத்தை வழிமொழிந்துள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை செயற் பாடுகள் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் தினமும் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும்.











# சர்வதேச தாய்மொழிகள் தினம் கலாசாலையின் காலை ஒன்றுகூடல்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது

வாராந்த காலை ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் அனைத்தும் 21.02.2024 சர்வதேச தாய்மொழி தினத்தின் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாளினதும் கருப்பொருள் அமைந்திருந்தது. அவ்வார காலை ஒன்று கூடல் நிகழ்வுகள் கலாசாலையின் விசேட கல்வி பாடநெறிக்கு பொறுப்பான விரிவுரையாளர் திரு. வே.சேந்தன் அவர்களால் வழிநடத்தப்பட்டு இரண்டாம் வருட விசேடகல்வி, ஆரம்பக்கல்வி, இரண்டாம் தேசிய மொழி தமிழ் ஆகிய பாடநெறி ஆசிரிய மாணவர் களினால் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் ஒழுங்கமை க்கப்பட்டு.நடாத்தப்பட்டது.

இவ்வருடத்திற்கான சர்வதேச தாய்மொழிதினத்தின் கருப்பொருளாக 'கற்றலுக்கும் தலைமுறைகளுக் கிடை யிலான கற்றலுக்கும் ஒரு தூணாக அமையும் பன்மொழிக்கல்வி' என்ற அடிப்படையில் பண்புத் தரமிக்க கல்வி, உட்படுத்தற்கல்வி, வாழ்நாட்கல்வி என்பன துணைக்கருப் பொருட்களாக அமைந்தன அந்தவகையில்

**திங்கட்கிழமை** (19.02.2024)

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியவர் விசேடகல்வி நெறியைச் சேர்ந்த திருமதி.எம்.ஏ.அஸ்மிலா. அன்றைய தினத்திற்கான கருப்பொருள் உரையை விசேடகல்வி நெறியையைச் சாா்ந்த திருமதி எம்.ஐ.எப்.சப்னா 'பண்புத்தரமிக்க கல்வி' பற்றி உரை நிகழ்த்தினார்.

**செவ்வாய்க்கிழமை** (20.02.2024)

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியவர் விசேட கல்வி பாட நெறியை சேர்ந்த திருமதி எம்.ஐ.எப்.சப்னா அவர்கள் கருப்பொருள் உரையை வழங்கியவர் விசேடகல்வி நெறியை சேர்ந்த திருமதி எம்.எ.அஸ்மிலா 'உட்படுத்தல் கல்வி' பற்றி உரையா ற்றினார்.

**வியாழக்கிழமை** (23.02.2024)

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியவர் ஆரம்பக் கல்வி பாட நெறியை சேர்ந்த திருமதி க.மைதிலி அவர்கள் கருப்பொருள் உரையை வழங்கியவர்: ஆரம்பக்கல்வி நெறியை சேர்ந்த செல்வி.பா.சுதாயினி 'வாழ்நாள் கல்வி' பற்றி உரையாற்றினார்.

**எழுத்துருவாக்கம்**
**திருமதி எம்.ஐ.எப்.சப்னா**
**விசேடகல்விநெறி (2022/2023)**









# கலாசாலை ஆசிரிய மாணவர்களின் செயன்முறைக் கற்றல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதலாம் வருட, இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களின் செய்முறைக் கல்விசார் செயற்பாடுகள் 13.02.2024 செவ்வாய்க்கிழமை காலை ஒழுங்குபடுத்தப்பட்டது.

கலாசாலையின் பிரதிஅதிபர் திரு.க.செந்தில் குமரன் அவர்கள் தலைமையில் மாணவர் மன்றக்காப்பாளர் திரு.பொ.சற்குணநாதன் மற்றும் விரிவுரையாளர்களும் இச்செயற்பாட்டின் ஒருங்கி ணைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

காலை 8.30 மணிக்கு தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தில் (FWC) இச்செயற் பாடுகள் இடம்பெற்றது. தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் வளவாளர; ஓய்வு நிலை விரிவுரையாளர் (JNCoE) திரு ஞா.இரட்ண சிங்கம் மற்றும் இணைப்பாளர் எஸ்.மதீசன் செயற்பாட்டு ரீதியான கற்றலுக்கு வழிப்படுத்தினர்

ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவர்களுக்கான சுற்றாடல்சார் செயற்பாடுகளுக்கான செய் முறைகள் மிக நேர்த்தியாக ஒழுங்கமைக்க ப்பட்டிருந்தது. இதில் விஞ்ஞான கற்கைநெறி ஆசிரிய மாணவர்களும் ஏனைய பிரிவு ஆசிரிய மாணவர்களும் மிக விருப்புடன் செயற்பாடு களில் ஈடுபட்டனர்.

விஞ்ஞான பாடநெறி ஆசிரிய மாணவர்களுக் கென உயிரியல், பௌதீகவியல், இரசாயண வியல் போன்ற துறைகளில் செய்முறைகள் நிகழ்த்தப்பட்டன. வளவாளர் திரு ஞா.இரத்தின சிங்கம் அவர்களின் இயல்பான பேச்சு அனைத்து ஆசிரிய மாணவர்களையும் உற்சாகத்துடன் செயற்பாடுகளில் ஈடுபட வைத்தது.

மதியம் 2.30 வரை இச்செயற்பாடுகள் இடம்பெற் றன. அன்றையநாள் செயற்பாடுகள் பற்றிய பின்னூட்டல்களை ஆசிரிய மாணவர்கள் அனைவரும் மிகவும் சுருக்கமாக கூறினர். அதனைத் தொடர்ந்து பிரதிஅதிபர் மற்றும் மாணவர் மன்றக்காப்பாளரின் நன்றியுரையுடன் அன்றைய தினத்திற்கான செய்முறைக்கற்றல் சிறப்பாக நிறைவடைந்தது..

**எழுத்துருவாக்கம்**
**திரு இ.செந்தூர்ச்செல்வன்**
**ஆசிரிய மாணவன் - விஞ்ஞானநெறி (2023/2024)**











# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு சுற்றாடல்சார் செயற்பாடுகள் பாடத்தின் முக்கியத்துவம்

ஆரம்ப வகுப்புக்களில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடம் முழுவதுமாகச் செயற்பாடு சார்ந்ததாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பாடத்தைக் கற்பிக்கும் போது ஆசிரியர் மாணவர்களை வகுப்பறைக்குள் வைத்து அதனை ஒரு வாசிப்புப் பாடமாகவும் எழுத்துப் பாடமுமாகவே நடாத்திச் செல்வதைப் பெருமளவுக்கு அவதானிக்க முடிகின்றது. இப்பாடத்தில் அதிகளவு வீட்டு வேலைகள் வழங்குவதையும் காண முடிகின்றது. ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் வீட்டு வேலைகள் வழங்குவதையும் காண முடிகின்றது. ஆரம்பப்பிள்ளைப பருவத்தில் வீட்டுவேலைகளைப் பிள்ளைகள் விரும்பாத ஒரு சூழ்நிலை தோற்றம் பெறும். இதனை ஆரம்பப் பாடசாலை ஆசிர-யர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இப்பருவத்தில் பிள்ளைக்கு தர்க்க ரீதியாகப் பாகுபடுத்திப் பார்க்கும் அறிவு இல்லாமலிருக்கும் காரணகாரியங்களைக் கண்டறியும் ஆற்றல் இல்லாமல் போகும். ஒரே நேரத்தில் பல விடயங்களை ஒன்றிணைந்து நோக்கும் ஆற்றல் இல்லாமல் போகும்.

சிறுவயதுப் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்குப் பிள்ளையும் குடும்பமும் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தமுடியும். என்கின்றனர். அதன்படி பிள்ளை அனுபவங்களினூடாகவும் அயற்சூழலுடன் இடைத்தாக்கம் புரிவதினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் கவனம் செலுத்துவதினூடாகவும், அவர்களது விருப்புக்கள், தேவைகள், பலம் பலவீனம், பாதுகாப்பு, அன்பான சூழலை உருவாக்கல் என்பவற்றினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். மத்தியகிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை படிப்படியாக மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளனர். இதற்கான ஆசிரிய கைந்நூலையும் தயாரித்துள்ளனர். கருப்பொருள்களைக் கற்பிக்கும் போது நிகழ்கால அனுபவங்களைப் பெறக் கூடிய வகையில் கற்பித்தல் வேண்டும். உதாரணமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் ''நாம் இலங்கையர்'' என்ற கருப்பொருளைச் சுதந்திரதினம் அல்லது குடியரசு தினம் என்பன வரும் தினங்களில் நடைமுறைப்படுத்தும் வகையில் கற்பிக்கும் போது பிள்ளை அது தொடர்பான நேரடி அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல் புதுவருட காலங்களில் ''புத்தாண்டுக் காலம்'' என்னும் கருப்பொருளையும் தேசிய வீரர்களின் நினைவு நாள்கள் வரும் போது ''எமது பண்டைய தகவல்கள்'' என்னும் கருப்பொருளையும் கற்பிக்க முடியும்.

இது தொடர்பில் ஆரம்பக்கல்வி ஆசிரியரிடம் வினவிய போது அவர்களது துலங்கல்கள் பின்வருமாறு இருந்தன.

1. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குப்படியே நாம் கற்பிக்கின்றோம்.
2. பொதுப் பரீட்சைகள் வலய மட்டத்தில் இடம்பெறும் போது பாடத்திட்ட ஒழுங்குப் படியே ஒவ்வொரு தவணையும் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.
3. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் பாடத்திட்டம் ஒழுங்கு முறைப்படி கற்பிக்கப்பட்டுள்ளதா? என்பதையே பரீட்சிக்கின்றனர்.

நடைமுறைத் தேவைகளும் நடைமுறை விடயங்களும் கலைத்திட்டத்தில் உள்ளீர்க்கப்படுதல் வேண்டும். உதாரணமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் நிலைபேண் அபிவிருத்தியை உணர்த்துவதற்குப் பொருத்தமான விதத்தில் கருப்பொருட்கள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

எனவே ஆரம்ப நெறிக் கலைத்திட்டத்தைத் தயாரிப்பவர்களும் அதனை நடைமுறைப்படுத்துபவர்களும் வெறுமனே போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நடைமுறைப் பிரயோகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் இன்றியமையாததாகும். எனவே ஆரம்பக்கல்வியில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது.



செல்வி சுதாயினி பாலசிங்கம்
ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி
(2022/2023)

……………………………………………………………………...

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு 04.02.2024 காலை இடம்பெற்றது. கலாசாலை அதிபர் தேசிய கொடியை ஏற்றினார். ஆசிரிய மாணவர்கள் தமிழில் தேசிய கீதம் இசைத்தனர்.



# சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான தேடல்



**செல்வி. பெலினி திருக்குமாரன்.**
**விஞ்ஞானநெறி**
**ஆசிரிய மாணவி.(2023/2024)**

2018 ஆம் ஆண்டில், டிசம்பர் 3, அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் ஜனவரி 24 சர்வதேச கல்வி தினமாக அறிவிக்கப்பட்டது.. இதைத் தொடர்ந்து, முதல் சர்வதேச கல்வி தினம் ஜனவரி 24, 2019 அன்று அனுசரிக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டிக்கான சர்வதேச கல்வி தினம் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. கல்வி மூலம் "உலக சமாதானத்தை நிலை நாட்டுவதே" இவ் ஆண்டின் தொனிப்பொருள் ஆகும்.

மறைந்த இந்திய முன்னாள் ஜனாதிபதியும் சிறந்த அணு விஞ்ஞானி யுமான அப்துல்கலாம் மாணவர்களை மையப்படுத்தி நிகழ்த்திய செயலூக்க பேச்சின் பின்னர் ஒரு மாணவி அவரை நோக்கி இந்தியாவின் பெருமை என்ன என எதைக் கருதுகிறீர்கள் என கேட்டபோது அவர் பின்வருமாறு விடை கூறினார்

"நான் ஏற்றிய இந்த குத்துவிளக்கு இந்து சமயத்தின் சின்னம் அதனை ஒளியேற்ற பயன்படுத்திய மெழுகுவர்த்தி கிறிஸ்தவத்தின் சின்னம் அதனை ஏற்றிய நான் ஒரு இஸ்லாமியர் இதுவே இந்தியாவின் பெருமைசூஎன்றார்

இதன் அடிப்படையில் இனம் மதம் மொழி பால் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி மனிதத்தை மட்டும் விதைப்பது கல்வி ஆகும். புறநிலை முரண்பாடுகள் என்பவற்றால்

கல்வி ஒரு மனிதனை உயர் அளவு சிந்தனையாளனாக மாற்றுவதோடு வரையறைகள் கடந்து பயணிப்பதற்கு வழி சமைப்பதால் கல்வி சமாதானத்தின் தேடு பொருளாக அமைகிறது

உலகளாவிய யுத்தங்கள், அரசியல் எண்ணக்கருக்கள், பொருளாதார மட்ட வேறுபாடுகள், இன அறநிலை மற்றும்

இளைய சமூகம் சிதறுண்டு காணப் படுகின்றது. இச்சமுதாயத்தை ஒருமைப் படுத்துவதற்கு கல்வி ஒன்றே சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது.

கல்வி என்பது நூல்களில் தேடுவன அல்ல ஒரு மனிதனை சமூக விழிப்புடையவனாக மாற்றுவதே கல்வியின் உன்னத நோக்காகும். இதனையே நாலடியாரில் "நெஞ்சத்து நடவு நிலை யாம் என்று உரைக்கும் கல்வி அழகே அழகு" என குறிப்பிடப்படுகின்றது. எனவே உலக சமாதானத்தின் உன்னதமான கல்வி வேறுபாடுகளை களைந்து சிறந்த மானிட சமூகத்தை உருவாக்கும்

நீங்களே உங்களுக்கு சொந்த சூரிய ஒளியாக இருங்கள், ஒவ்வொரு வெற்றிக்கும் உங்களை தகுதியுடையவராக ஆக்குங்கள். கற்கும் ஆசையை எப்போதும் உங்கள் இதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள

# கல்வி உலகின் கலங்கரை விளக்கு
# அமரர் கலாநிதி தம்பிஐயா கலாமணி

யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கல்விக் கூடமாகிய யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பட்டப்பின்கல்வி டிப்ளோமா கல்வி முதுமாணி போன்ற கற்கை நெறிகளை பின்பற்றியவர்களுக்கு மிகவும் தெரிந்த ஆற்றலாளர் அமரர் தம்பிஐயா கலாமணி அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றிய கலாமணி அவர்கள் ஒரு சிறந்த பௌதீகவியல் ஆசிரியர் ஆவார்.

அமர்ர் த. கலாமணி வடமராட்சி அல்வாய் மண்ணின் புகழ் பூத்த நாடகக் கலைஞர் தம்பிஐயா பர்வதம் தம்பதியினரின் மகனாக 1952.02.04 அன்று பிறந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதா ரியான இவர் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் பௌதீகவியல் ஆசிரியராக கடமையாற்றி மாணவர்களின் நன்மதிப் பைப் பெற்றவர்.

இயல்பாகவே நாடகம், நாவல், சிறுகதை கூத்து என்பவற்றில் ஆர்வம் கொண்ட அவர் கலையுலகிலும் சிறந்து விளங்கினார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இணைந்து பன்முகப் பணிகளில் ஆர்வத்துடன் பங்காற்றினார். பூதத்தம்பி நாடகம் அவருக்கு மிகவும் பெருமை சேர்த்த்தொன்நாகும். பல புராண நாடகங்களை எழுத்துருவாக்கம் செய்து மேடையேற்றிய பெருமை இவரை சார்ந்தது.

இலங்கையில் மட்டுமின்றி புலம்பெயர் தேசங்களிலும் கூத்து மரபுகளை கொண்டு சேர்த்த பெருமை இவரை சார்ந்தது. ஆஸ்திரேலியாவின் சிட்னி மெல்போர்ன் நகரங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வு களில் இவரது நாடகங்கள் மேடையேற்றப் பட்டதுடன் புலம்பெயர் தமிழிலக்கிய ஆக்கத்துறை முன்னோடி யாகவும் வகிபாகம் கொண்டமை சிறப்பானதாகும்.

ஜீவநதி சஞ்சிகையின் தோற்றுவாராக விளங்கியவர். கல்வி உலகின் தமிழ் கூத்து நாடக மரபின் முன்னோடி கலாநிதி த.கலாமணி அவர்கள் தனது 72 ஆவது வயதில் 09.02.2024 அன்று எம் மத்தியிலிருந்து இறைவனடி சேர்ந்தார். பன்முக ஆற்றலாளர் ஒருவரின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிக்கு பேரிழப்பாகும்

**எழுத்துருவாக்கம்**

**திரு இ.செந்தூர்ச்செல்வன்**
**ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)**







Guru Printers - 021 221 4777

# மணிவிழா நாயகிக்கு கலாசாலை சமூகத்தால் உவந்தளிக்கப்பட்ட வாழ்த்துப்பா



















# கலாசாலையில் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்














இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.03.2024 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது